www.freetnbooks.com

**8 - STD** **முழு ஆண்டுத் தேர்வு - 2024** பதிவு எண்.

**சமூக அறிவியல்**

நேரம்: 2.30 மணி மதிப்பெண்கள்: 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **14 x 1 = 14**

1. 1453 ம் ஆண்டு கான்ஸ்டாண்டி நோபிள் யாரால் கைப்பற்றப்பட்டது.
   அ) பிரான்ஸ் ஆ) துருக்கி இ) டச்சு ஈ) பிரிட்டன்
2. ஹைதர் அலி மைசூர் அரியணை ஏறிய ஆண்டு ____
   அ) 1756 ஆ) 1761 இ) 1763 ஈ) 1764
3. மகல்வாரி முறை எந்தப் பகுதியில் செய்து கொள்ளப்பட்டது?
   அ) மகாரஷ்டிரா ஆ) மதராஸ் இ) வங்காளம் ஈ) பஞ்சாப்
4. பழங்கால நகரங்கள் எனப்படுவது
   அ) ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோ ஆ) டெல்லி மற்றும் ஹைதராபாத்
   இ) பம்பாய் மற்றும் கல்கத்தா ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
5. உயிரினப் படிமங்கள் ____ பாறைகளில் காணப்படுகின்றன.
   அ) படிவுப்பாறைகள் ஆ) தீப்பாறைகள் இ) உருமாறியப்பாறைகள் ஈ) அடியாழப்பாறைகள்
6. புவியில் உள்ள நன்னீரின் சதவிகிதம் ____ அ) 71% ஆ) 97% இ) 2.8% ஈ) 0.6%
7. போரின் காரணமாக நடைபெறும் குடிபெயர்வு ____ ஐ சார்ந்தது.
   அ) மக்களியல் ஆ) சமூக மற்றும் கலாச்சாரம் இ) அரசியல் ஈ) பொருளாதாரம்
8. மக்கட்தொகை பரவலை ____ மூலம் காண்பிக்கலாம்
   அ) கோடுகள் ஆ) வண்ணங்கள் இ) புள்ளிகள் ஈ) சமஅளவுள்ள கோடுகள்
9. ஒரு மாநிலத்தின் ஆளுநர் யாரால் நியமிக்கப்படுகிறார்?
   அ) குடியரசுத்தலைவர் ஆ) துணை குடியரசுத்தலைவர்
   இ) பிரதமமந்திரி ஈ) முதலமைச்சர்
10. ஐ.நா. சபை 1979 - ம் ஆண்டை ____ சர்வதேச ஆண்டாக அறிவித்தது.
    அ) பெண்குழந்தைகள் அ) குழந்தைகள் இ) பெண்கள் ஈ) இவற்றில் எதுவுமில்லை
11. பின்வருவனவற்றுள் எந்த தீவுகள் இந்தியாவிற்கு சொந்தமானவை?
    அ) அந்தமான் மற்றும் மாலத்தீவு அ) அந்தமான் மற்றும் லட்சத்தீவுகள்
    இ) இலங்கை மற்றும் மாலத்தீவு ஈ) மாலத்தீவு மற்றும் லட்சத்தீவுகள்
12. இந்தியாவின் மிக உயர்ந்த மற்றும் இறுதியான நீதித்துறை ____
    அ) குடியரசுத்தலைவர் ஆ) நாடாளுமன்றம் இ) உச்சநீதிமன்றம் ஈ) பிரதமஅமைச்சர்
13. வங்கி பணம் என்பது எது?
    அ) காசோலை ஆ) வரைவு இ) கடன் மற்றும் பற்று அட்டைகள் ஈ)மேற்கூறிய அனைத்தும்
14. கலப்புப் பொருளாதாரம் என்பது ____ கலவையாகும்.
    அ) முதலாளித்துவம் அ) பொதுவுடமை
    இ) முதலாளித்துவம் மற்றும் பொதுவுடமை ஈ) எதுவுமில்லை

**II. எவையேனும் 10 வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி** **10 x 2 = 20**

15. நாணயங்களின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.
16. முதல் ஆங்கிலேய மைசூர் போருக்கான காரணங்கள் யாவை?
17. செல்வச்சுரண்டல் கோட்பாடு பற்றி எழுதுக.
18. நகர்புற பகுதி என்றால் என்ன?
19. பெண்கள் முன்னேற்றத்திற்காக போராடிய முக்கிய தலைவர்களின் பெயரினைக் குறிப்பிடுக.
20. சுற்றுச்சூழல் அல்லது இயற்கையால் இடம் பெயர்வதற்கான காரணங்களை கூறுக.
21. நீர், சுழற்சி - வரையறு.
22. ஐந்தாமநிலை பொருளாதார நடவடிக்கைகள் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் தெளிவாக்குக.
23. இயற்கையமைப்பு புவிப்படம் என்றால் என்ன?
24. முதலமைச்சர் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்?



www.freetnbooks.com | FREETNBOOKS
CS CamScanner

www.freetnbooks.com

25. ஓர் இந்தியக் குடிமகன் நமது நாட்டில் அனுபவிக்கும் உரிமைகள் யாவை?
26. மனித உரிமைகள் என்றால் என்ன?
27. மின்வங்கி மற்றும் மின்பணம் சிறுகுறிப்பு வரைக.
28. சமுதாய தேவை என்றால் என்ன?

**III. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி** **10 x 5 = 50**

29. கோடிட்ட இடங்களை நிரப்புக.
    1. _______ சிவகங்கையின் சிங்கம் என அழைக்கப்படுகிறார்.
    2. நிலச்சரிவு ______ இடருக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.
    3. புவிக்கோள் மாதிரி என்பது _____ ன் உண்மையான உருவமாதிரியாக்கமாகும்.
    4. மனித உரிமைகள் என்பது ______ உரிமைகள்
    5. மின்னணு வங்கியை ______ என்றும் அழைக்கலாம்.
30. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. ஜான்சி | - | புவியின் மேற்பரப்பு |
| 2. பல்கலைக்கழக மானியக்குழு | - | சூறாவளி |
| 3. பம்பாய் | - | லெட்சுமிபாய் |
| 4. குறைந்த அழுத்தம் | - | ஏழு தீவு |
| 5. நீர் ஊடுருவுதல் | - | 1956 |

31. சரியா ? தவறா ? எனக்குறிப்பிடுக.
    1. இரயத்துவாரி முறை, தாமஸ்மன்றோவால் அறிமுகப்படுத்தப்பட்டது.
    2. இந்திய சமூக சீர்திருத்த இயக்கத்தின் முன்னோடி ராஜாராம் மோகன்ராய்
    3. மூடுபனி என்படுவது காற்றில் தொங்கு நிலையில் மிதக்கும் நுண்ணிய நீர்துளிகளைப் பெற்றிருப்பத்தில்லை.
    4. மனித உரிமைகள் மற்றும் வாழ்வியல் உரிமைகள் ஒரே மாதிரியானவை.
    5. NCC மாணவர்களுக்கு அடிப்படை இராணுவப்பயிற்சி அளிக்கப்படுகிறது.
32. வேறுபடுத்துக.
    1. உருமாறிய பாறைகள் மற்றும் படிவுப்பாறைகள்
    2. வேளாண் சார்ந்த தொழிலகங்கள் மற்றும் கடல் வளம் சார்ந்த தொழிலகங்கள்

    காரணம் கூறுக:

    3. புவியில் நன்னீர் குறைவாக உள்ளது.
33. பிரிட்டிஷ் ஆட்சியை விரிவுபடுத்த டல்ஹௌசி பிரபு கொண்டு வந்த கொள்கையை பற்றி விவரி?
34. காலனித்துவ நகர்புற வளர்ச்சியைப் பற்றி விளக்குக.
35. சுதந்திரப் போராட்டத்தில் பெண்களின் பங்கினை கண்டறியவும்.
36. மண்ணடுக்குகள் பற்றி விவரிக்கவும்
37. காற்று மாசுபடுதலைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.
38. மூலப்பொருட்களின் அடிப்படையில் தொழிலகங்களை வகைப்படுத்தி விளக்குக.
39. ஒருவருக்கு எதன் அடிப்படையில் இந்தியக் குடியுரிமை இரத்து செய்யப்படுகிறது.
40. துணை இராணுவப்படை பற்றி எழுதுக.
41. நீதித்துறையின் பங்கு பற்றி எழுதுக.
42. பொதுத்துறைக்கும் தனியார் துறைக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக?

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **2 x 8 = 16**

43. கீழ்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.
    i) தில்லி ii) லக்னோ iii) மீரட் iv) ஜான்சி v) மதுரை vi) சென்னை
    vii) பம்பாய் viii) கொச்சின்
44. கீழ்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.
    1) பசிபிக் பெருங்கடல் 2) இந்திய பெருங்கடல் 3) நிலநடுக்கோடு
    4) ஆஸ்திரேலியா 5) ஆப்பிரிக்கா 6) இந்தியா 7) கிரீன்லாந்து
    8) ஜப்பான்



www.freetnbooks.com | FREETNBOOKS
CamScanner